**கிரிபாவ பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 யூன் 06 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்டோபர் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிரிபாவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரிய 32 இடங்களுக்கான பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வன்னிகுடாவெவ சிகிச்சை கட்டிடத்தினதும் பாலர் பாடசாலை கட்டிடத்தினதும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் ரூபா. 2,380,356 செலவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படும் கராஜின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் ரூபா. 15,913,882 செலவு செய்யப்பட்டு நிர்மாணக்கப்பட்ட தம்புத்த பொது மக்கள் நூலகக் கட்டிடம் மற்றும் பெரகும்புர வாராந்த சந்தைக் கட்டிடம் என்பவற்றை புனர்நிர்மானம் செய்வதற்கான செலவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணங்காத கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 11 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அதனுடன் தொடர்பான அட்டவணைகள் / பயன்பாட்டுப் பதிவேடுகளில் காணப்பட்ட மீதிகளுக்கிடையில் ரூபா. 44,708,570 ஆன இணக்கமின்மை காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

(i) 2017 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா. 39,433,371 பெறுமதியான பெற வேண்டிய கணக்குகளிலிருந்து ரூபா 33,496,765 இற்குரிய காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 03 ஆண்டுகளை விஞ்சிய நிலுவை வாடகை ரூபா 228,834 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் சபைக்குரிய ரூபா 101,500 ஆன 05 வைப்பு மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா. 34,697,495 பெறுமதியான செலுத்த வேண்டிய மீதிகளில் ரூபா. 18,726,908 இற்குரிய காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல ஆதாரங்கள் காணப்படாமை

**கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 42,366,464 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான ரூபா 1,301,180 தொகையான கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 போதியளவு அதிகாரமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

ரூபா 9,073,339 பெறுமதியான 38 கடன் மீதிகள் மற்றும் ரூபா 8,657,335 ஆன கடன்பட்டோர் மீதிகள் 01 முறையான அங்கீகாரமின்றி கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 259,140 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 86,050 ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 ஆம் ஆண்டு | | | | 2016 ஆம் ஆண்டு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 385 | 391 | 391 | 35 | 5 | 390 | 390 | 360 |
| (ii) | வாடகை | 2,939 | 3,520 | 2,258 | 372 | 2,921 | 3,020 | 2,563 | 325 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 410 | 377 | 497 | 46 | 680 | 375 | 375 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 36,199 | 27,750 | 27,892 | 5,450 | 34,190 | 27,795 | 30,790 | 1,806 |
| | மொத்தம் | 39,933 | 32,038 | 31,038 | 5,903 | 37,796 | 31,580 | 34,118 | 2,491 |

**குறிப்பு**

- மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறமுதி மற்றும் சபையினால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதிக்கு இடையே வேறுபாடுகள் காணப்பட்டன.
- மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் முன்னைய ஆண்டுகளில் நிலுவை பெறுவனவும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா. 32 மில்லியனாலும் முன்னைய ஆண்டின் நிலுவை வருமானம் ரூபா. 2.4 மில்லியில் மொத்தம் ரூபா 31 மில்லியன் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் ரூபா. 2.4 மில்லியனான நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா. 5.9 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

**2.2.3 வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2002 ஆம் ஆண்டு நிலுவையாக இருந்த ரூபா 80,056 ஆன குத்தகை வாடகை அறவிடுவதற்கு சபை எடுத்திருந்த சட்டரீதியான செயற்பாடுகள் வெற்றியளித்திருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய சொத்துக்களை குத்தகைக்கு வழங்கியதால் ரூபா 55,500 ஆன நிலுவை குத்தகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் 2017 திசெம்பர் 31 அன்று பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களாக முறையே ரூபா 2,867,000 ரூபா 488,928 ஆகவிருந்தது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவிற்கமைவாக 30 பிரதான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்த போதும் 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அந்த உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

சபையினால் பின்பற்றப்பட்டிருந்த உபவிதிகளின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகளுக்கு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை

**(இ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம் செய்யும் இடத்தைச் சுற்றி வேலியமைத்து நுழைவாயில் (கேட்) ஒன்றை பொருத்துவதற்காக ரூபா. 456,157 ஆனது செலவு செய்யப்பட்டு 03 வருடங்கள் கடந்த நிலையில் சபை நாளாந்தம் கழிவுகள் சேகரிக்காததன் காரணமாக திண்ம கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாமல் இருந்தது.

(ii) மீளாய்வாண்டில் கழிவு வகைப்படுத்தல் தொடர்பான வேலைத் திட்டங்கள், வீட்டுத் தோட்டப் பயிரிடும் போட்டிகள் மற்றும் குப்பைத் தொட்டிகள் விநியோகித்தல் போன்ற வேலைத்திட்டங்களை நடாத்துவதற்காக ரூபா. 171,040 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறியமால் இருந்ததுடன் அது தொடர்பாக தொடர் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வெளியே எடுத்துச் செல்லப்பட்டு மீள ஒப்படைக்காக ரூபா 8,935 ஆன காணாமல் போன ரூபா 3,990 ஆன நூலக புத்தகங்களின் பெறுமதி பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தின் புதிய அபிவிருத்தி செய்யப்பட்ட பிதேசங்கள் இனங்காணப்பட்டு நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் வர்த்தமானியில் வெளியிட்டு வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனித வள முாகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரை பதவியணியினர் 09 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்த மற்றும் இடமாற்றம் செய்யப்பட்டிருந்த 03 பேரிடமிருந்து ரூபா 33,888 தொகை அறவிடப்பட்டிருந்தது.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாமை

25-30 தேக்கு மரக் குற்றிகள் பெறுமதி மதிப்பிடப்பட்டு இருப்பு புத்தகங்களுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

சபையின் தலைமை அலுவலகம், நூலகம், சிகிச்சை நிலையம் மற்றும் சனசமூக மண்டபம் என்பவற்றை பேணிச்செல்லும் காணி, விளையாட்டரங்கு, வாரச்சந்தைமற்றம் மயானங்களுக்குரிய காணி சபைக்கு பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.3 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

(i) ரூபா 608,020 பெறுமதியான உழவு இயந்திரமொன்று 2012 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) 03 ஆண்டுகளுக்கு முன்னர் ரூபா 1,125,401 செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட அச்சுக்கல் உற்பத்தி செயற்திட்டம் செயற்பாடற்று காணப்பட்டது.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக 2018 யூன் 06 ஆந் திகதியம் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 07 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமரப்பிக்கப்பட்டிருந்தன.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) 06 செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாடுகளிலிருந்து 12 சதவீதத்திலிருந்து 42 சதவீதம் வரையான சேமிப்புக்கள் மற்றும் 03 வருமான விடயங்களில் 62 சதவீதம் முதல் 85 சதவீதம் வரை வருமான சேகரிப்பின் குறைவும் அவதானிக்கப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் போது பாதீடு செய்யப்படாதிருந்த 07 செயற்திட்டங்களுக்காக ரூபா 1,327,469 செலவிடப்பட்டிருந்தன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதுடன் கீழ்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | | கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமை |
| (ஆ) சொத்துக்கள் / ஆதனங்கள் கட்டுப்பாடு | (i) | இருப்பு பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை |
| | (ii) | பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை |
| (இ) இருப்புக் கட்டுப்பாடு | (i) | இருப்பு பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை |
| | (ii) | முயைற்ற இருப்புக் கட்டுப்பாடு |
| (ஈ) ஊழியர் முகாமைத்துவம | | வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாமை |
| (உ) செயற்திட்டங்கள்/ஒப்பந்தக் கட்டுப்பாடு | (i) | பாதீடு செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் நிறைவேற்றாமை |
| | (ii) | பாதீடு செய்யப்படாத ஒப்பந்தங்கள் நிறைவேற்றியிருந்தமை |
| | (iii) | செயற்திட்டங்களை இடைநடுவில் நிறுத்துதல் |